அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 19/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7.

1992 ஏப்பிரல் மாதம் 29ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாகாண அரசாங்கசேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள் அனைவருக்கும்,

இணைந்த சேவைகள் சார் உத்தியோகத்தர்களின்
வருடாந்த இடமாற்றங்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் 111 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் 1970.08.04 ந் திகதியிட்ட 6 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கும் 1970.08.21 ந் திகதியிட்ட 3 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிக்கைக்கும் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

02. இணைந்த சேவைகளைச் சேர்ந்த பதவிநிலையல்லாத தரங்களின்வருடாந்த இடமாற்றங்கள் யாவும் ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செய்யப்படல் வேண்டும். உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க சேவைக்கும் ஏற்படும் இடர்களைத் தவிர்ப்பதன் பொருட்டு இடமாற்றங்கள் தொடர்பில் பின்வரும் நடைமுறை வருடந்தோறும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

03. இடமாற்றச்சபைகளை நிறுவுவதற்கு பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1. திணைக்கள இடமாற்றச் சபைகள்.

திணைக்களம் ஒன்றுக்குள் சேவை நிலையங்களுக்கிடையில் செய்யப்படும் இடமாற்றங்களை கையாள்வதற்கு.

11. அமைச்சு இடமாற்றச் சபைகள்.

ஒரே அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்கிடையில் செய்யப்படும் இடமாற்றங்களைக் கையாள்வதற்கு.

111. அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றச் சபைகள்.

அமைச்சுக்களுக்கிடையிலும் அமைச்சுக்களின் கீழ் வராத திணைக்களங்களுக்குமிடையிலும் செய்யப்படும் இடமாற்றங்களைக் கையாள்வதற்கு.

04. ஒவ்வொரு இடமாற்றச்சபையும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தரைகளுக்கும் அமைவாக இடமாற்ற திட்டமொன்றை வகுத்தல் வேண்டும். அது தொடர்புடைய உத்தி-யோகத்தர்கள் யாவருக்கும் அறிவிக்கப்படல் வேண்டும். அத்தகைய இடமாற்றத் திட்டத்தின் பிரதியொன்று தாபனப் பணிப்பாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

05. திட்டத்தை தயாரிக்கும் போது இடமாற்றச் சபைகள் கிடைக்கக் கூடிய வசதிகள் ஆதியனவற்றைக் கருத்திற் கொண்டு திணைக்களமொன்றுக்குள் நிலையங்களின் வகுதிகள் பற்றி மட்டும் அதாவது பெயரளவில் உகந்த நிலையங்-கள், உகப்பில்லாத நிலையங்கள் பற்றி மட்டும் தீர்மானித்தல் வேண்டும்.

06. இடமாற்றங்கள் ஆதியனவற்றுக்கான உத்தியோகத்தர்களின் தகுதி தீர்மானிக்கப்படும் போது பின்வரும் நிபந்தனைகளையும் திட்ட உள்ளடக்குதல் வேண்டும்.

1. உகந்த நிலையமொன்றில் 05 ஆண்டுகள்/உகப்பில்லாத நிலையமொன்றில் 02 ஆண்டுகள் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

11. உகந்த நிலையமொன்றில் விதித்த காலப்பகுதியைப் பூர்த்தி செய்யாத போதிலும் அந்த உகந்த நிலையத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர் உகப்பில்லாத நிலையமொன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு விண்ணப்பித்தால் அவர் அத்தகைய இடமாற்றம் செய்யப்படுவதற்குத் தகுதியுடைய-வராவார்.

111. உகப்பில்லாத நிலையமொன்றில் 02 ஆண்டுகளுக்கு அல்லது அதற்கும் கூடுதலான காலத்துக்கு சேவையாற்றிய உத்தியோகத்த-ரொருவருக்கு உகந்த நிலையமொன்றுக்கு இடமாற்றம் வழங்-குவதன் பொருட்டு அந்த உகந்த நிலையத்தில் மிகக்கூடுதலான காலம் சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர் இடமாற்றம் செய்யப்படலாம்.

1V. உகப்பில்லாத நிலையமொன்றில் சேவையாற்றுகின்ற உத்தியோ-கத்தரொருவர் விதித்தகாலப்பகுதிக்கும் கூடுதலான காலப் பகுதிக்கு அவர் விரும்புமிடத்தும் அந்த நிலையத்திற்குச் செல்வ-தற்கு கோரிக்கை விடுக்கும் விண்ணப்பகாரர்கள் இல்லாமைவிருக்குமிடத்தும் அந்நிலையத்தில் இருப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

V. உத்தியோகத்தருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் ஆகக்குறைந்த இடர்பாடுகளை ஏற்படுத்தும் இடமாற்றம் பற்றி இடமாற்றச் சபை தீர்மானிப்பதற்கு வசதியளிக்கக்கூடியதாக உத்தியோகத்-தரொருவர் தாம் கோரியுள்ள நிலையங்களுக்கு மேலதிகமாகத் தமது விண்ணப்பத்தில் 03 விருப்புரிமை நிலையங்களைக் குறிப்-பிடுதல் வேண்டும்.

6.......03

V1. உத்தரவுச் சீட்டுக்களும் சான்றிதழ்களும் அல்லது மேலதிக
ஊதியம் வழங்கப்படும் அலுவலகமொன்றில் சேவையாற்றுகின்ற
உத்தியோகத்தரொருவர் அதைப் போன்ற அலுவலக மொன்-
றுக்கு இடமாற்றம் செய்யப்படலாகாது. (உதாரணம்-
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்/குடிவரவு, குடியகல்வுத்
திணைக்களம்/சுங்கத்திணைக்களம்/பதிவாளர் அதிபதி திணைக்களம்/
புடவைத் திணைக்களம்/ஆட்பதிவுத் திணைக்களம் ஆதியன போன்ற
அலுவலகங்கள்)

V11. உத்தியோகத்தரொருவரின் கோரிக்கை, திணைக்கள இடமாற்றச்
சபையொன்றினால் வழங்கப்படமுடியாமலிருக்குமிடத்து, அவர்
விரும்பினால் அத்திணைக்களத்தைவிட்டு வெளியே செல்வதற்கு
அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். அத்தகைய
கோரிக்கையின் விபரங்கள் அவருடைய விண்ணப்பத்தில் தெளி-
வாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

V111. இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் இடமாற்றச்சபையினால்
விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படல் வேண்டும்.
அத்துடன் அவை திணைக்களத் தலைவருக்கு ஊடாகச் செய்யப்-
படல் வேண்டும். அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றச்
சபைகளுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள விண்ணப்பங்கள் இத்துடன்
அனுப்பப்படும் மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட படி-
வத்தில் செய்யப்படல் வேண்டும். (அமைச்சு, திணைக்கள இடமா-
ற்றச்சபைகளும் கூட பொருத்தமான திருத்தங்களைச் செய்வதன்
மூலம் இதே படிவத்தை உபயோகிக்கலாம்)

07. இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டபின்
திணைக்களங்களின் தலைவர்கள் பின் வரும் ஆவணங்களைத்திணைக்கள இடமாற்றச்
சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் அத்துடன்

11. ஒவ்வொரு சேவையிலுமுள்ள ஒவ்வொரு தரத்தின் கீழும்
தயாரிக்கப்பட்ட அட்டவணைகள்.

திணைக்கள இடமாற்றச் சபையின் சிபாரிசுகளைப் பெற்றுக்-
கொள்வதன் பேரில் திணைக்களத் தலைவர் இடமாற்றங்களுக்கான கட்டளையைப்
பிறப்பித்து இச்சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியின் கீழ் தரப்பட்டுள்ள உரிய
திகதிக்கு முன்னர் அதுபற்றி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.
மேன்முறையீடுகளைப் பெறுவதற்கான இறுதித்திகதியும் கூட அறிவிக்கப்படல்
வேண்டும்.

08. மேன்முறையீடுகளின் முடிவடைகிற திகதியை உடனடுத்து பின்வரும்
ஆவணங்களை அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு திணைக்களத் தலைவர்
நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1. திணைக்களத் தலைவரினால் செய்யப்பட்ட இடமாற்றக்கட்டளை-
களுக்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீடுகள் ஏதாவதிருந்-
தால் அவற்றுடன் திணைக்களத் தலைவர் தமது அவதானிப்பு-
ரைகளையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

11. பந்தி 7 -11 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி தயாரிக்கப்பட்ட அட்டவணையுடன் அமைச்சு இடமாற்றச் சபைகளுக்குச் செய்யப்பட்ட விண்ணப்பங்கள்.

மேலே குறிப்பிட்ட ஆவணங்களைப் பெற்றவுடன் அமைச்சின் செயலாளர் அவற்றை அமைச்சு இடமாற்றச் சபைகளுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இச்சபை இடமாற்றம் பற்றித் தீர்மானித்தல் வேண்டும். இத்தகைய தீர்மானங் சம்பந்தப்பட்ட சகலதரப்பினர்களுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

09. அமைச்சுக்களின் செயலாளர்கள் பின்வரும் ஆவணங்களை அரசாங்க நிருவாக அமைச்சின் இணைந்த சேவைகள் பகுதியில் நிறுவப்பட்டுள்ள அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றச் சபைகளுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் வேண்டப்படும் சகல விபரங்களையும் கொடுத்து இத்துடன் அடக்கப்பெற்றுள்ள 01 ஆம் இலக்கப் படிவத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள்.

11. அதே மாவட்டத்தில் அல்லது நிலையத்தில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தில் சேவையாற்றியுள்ளவர்களும் வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்காதவர்களுமான உத்தியோகத்தர்களின் விபரங்களைக் கொடுத்து இத்துடன் அடக்கப்பெற்றுள்ள 02 ஆம் இலக்கப் படிவத்தில் தயாரிக்கப்பட்டவொரு அட்டவணை

10. இடமாற்றக்கட்டளைகளுக்கு எதிராக செய்யப்படும் மேன்முறையீடுகளைப் பரிசீலனை செய்வதற்கான மேன்முறையீட்டுச் சபைகள் தாபன விதிக்கோவையின் 111 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவிற்கமைவாக நிறுவப்பட்டு இதற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு ஆண்டிலும் செத்தெம்பர் 01 ஆந் திகதிக்கும் திசெம்பர் 31 ஆந் திகதிக்குமிடையிலுள்ள காலப்பகுதியில் பரஸ்பர இடமாற்றங்களுக்காகச் செய்யப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படலாகாது.

12. இணைந்த சேவைகளையும் பிற திணைக்களத்தரங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தொடர்பிலான இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஒவ்வொரு ஆண்டிலும் பின்வரும் அட்டவணை பின்பற்றப்படல் வேண்டும்.

மே 05 முதல் 30 வரை - இடமாற்றச்சபைகள் நிறுவுதல் -30 ஆந் திகதிக்கு முன்னர் இடமாற்றக் கொள்கைகளை வகுத்தலும் இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களைக் கோருதலும்.

யூலை 15 - இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களின் முடிவுத் திகதி.



(ஏ.)

யூலை 30 – தொடர்புடைய இடமாற்றச் சபைகள் கீழ் திணைக்களங்களினால் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு அந்த இடமாற்றச் சபைகளுக்கு அவை சமர்ப்பிக்கப்படல்.

ஓகஸ்ற் 31 வரை – இடமாற்றக்கட்டளைகள் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். (இடமாற்றங்கள் அமைச்சுக்களுக்குள் / திணைக்களங்களுக்குள் கொடுக்கப்படமுடியாத விடயங்கள் பற்றி அரசாங்க நிருவாக அமைச்சுக்கு அறிவிப்பதற்கான இறுதித்திகதி ஓகஸ்ற் 31 ஆந் திகதியாகும்)

செத்தெம்பர் 30 வரை–மேன்முறையீடுகள் செய்வதற்கான முடிவுத்திகதி.

ஒற்றோபர் 31 வரை –மேன்முறையீடுகள் மீதான தீர்மானங்கள் அறிவிப்பதை முடிவுக்கு கொண்டுவரல்.

13. தொழிற்சங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

14. 1993 ஆம் ஆண்டினதும் அதற்குப்பிற்பட்ட ஆண்டுகளினதும் வருடாந்த இடமாற்றங்கள் இச்சுற்றறிக்கையின் நியதிகளின்படி செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்

செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

தேவா/27

அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்கான விண்ணப்பம்.

---

.............................................அமைச்சின் கீழுள்ள.......... திணைக்களம்.

(அ) உத்தியோகத்தரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது.

---

01. முழுப் பெயர் - (தனிப்பேரெழுத்துக்களில்)
குடும்பப்பெயரின் கீழ் கோடிடுக)

---

02. பிறந்த திகதி :
உத்தியோகத்தரின் சொந்த ஊர் :-

---

03. (1.) சேவையின் பெயர் :-
(11) சேவையில் சேர்ந்த மொழி மூலம் :-
(111) வகுப்பு அல்லது தரம் :-
(1) தற்போதைய வகுப்பில் அல்லது தரத்தில் சேர்ந்த திகதி :-

---

04. தற்போதய வருடாந்த சம்பளம் :-

---

05. (அ) உத்தியோகத்தர் திருமணமானவரா என்பது :-
(1) அப்படியாயின், பிள்ளைகளின் எண்ணிக்கையும் அவர்களுடைய வயதும் :-

(11) பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் படிக்கும் பாடசாலைகளின் பெயர் :-

(111) கணவன்/மனைவி படை ஒன்றில் அல்லது பொலிசில் சேவை செய்கின்றாரா வென்பது. அப்படியாயின் அவரின் சேவையின் பெயரும் பதவியும் :-

(ஆ) பின்வருவனவற்றில் பெற்ற தேர்ச்சி:

(1) சிங்களம் (சித்தியடைந்த தேர்ச்சிப் பரீட்சையின் மட்டம்) :-

(11) தமிழ் (சித்தியடைந்த தேர்ச்சிப் பரீட்சையின் மட்டம்) :-

( III ) ஆங்கிலம் ( மிநன்று / நன்று / குறைவு )

( இ ) சேவையில் சேர்ந்த திகதி தொடக்கம் ஒவ்வொரு நிலையத்திலும் அல்லது அமைச்சிலும் அல்லது திணைக்களத்திலும் ஆற்றிய முன்னைய சேவைக்காலப் பகுதிகளும் தற்போதைய சேவை நிலையத்தில் அல்லது திணைக்களத்தில் அல்லது அமைச்சில் ஆற்றிய சேவைக்காலப்பகுதியும்.

| இருந்து | வரை | முழுமையான காலப்பகுதி | சேவை நிலையம் | திணைக்களம் | எந்த அமைச்சின் கீழ் என்பது. |
|---|---|---|---|---|---|
| .... | .... | ....... | ..... | ....... | .......... |
| .... | .... | ....... | ..... | ....... | .......... |
| .... | .... | ....... | ..... | ....... | .......... |

---

06. இடமாற்றமொன்றை உத்தியோகத்தர் எதிர்பார்க்கும் மூன்று அமைச்சுக்கள். முன்னுரிமை ஒழுங்குவரிசையில் குறிப்பிடவும்.

இட மாற்றத்திற்கு விண்ணப்பித்த மாவட்டங்கள் :

( அ )

( ஆ )

( இ )

---

07. விண்ணப்பத்திற்கான காரணங்கள் :-

( அ )

( ஆ )

( இ )

---

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் பிரகடனப்படுத்துகிறேன்.

திகதி :-

.........................

விண்ணப்பகாரரின் ஒப்பம்.

ஒரே மாவட்டத்தில் அல்லது ஒரே நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்துக்குச் சேவை யாற்றியுள்ளவர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காதவர்களுமான உத்தியோகத்தர்களின் அட்டவணை.

| தொடர் இல | உத்தியோகத்தரின் பெயர். | பதவியும் தரமும் | பிறந்த திகதியும் ... இல் வயதும். | தற்போதைய சேவை நிலையமும் சேவைக்காலமும். | திருமணமானவரா அல்லது தனிப்பட்டவரா வென்பதுவும் கணவனின் / மனைவியின் சேவை நிலையமும். | பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் விபரங்கள். | சொந்த ஊர். | முன்னைய சேவை நிலையங்கள் | திணைக்களத் தலைவரின் சிபாரிசுகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

19/92

படிவம் இல. 01

## வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களின் அட்டவணை.

| தொடர் இல. | உத்தியோகத்தரின் பெயர் | பிறந்த திகதியும் ...இல் வயதும். | திருமணமானவரா அல்லது தனிப்பட்டவரா என்பதுவும் கணவனின் / மனைவியின் சேவை நிலையமும். | பிள்ளைகளின் எண்ணிக்கையும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் | கணவன் / மனைவி பாதுகாப்புப் படையில் உள்ளவரா? அப்படியாயின் சேவை நிலையத்தின் முகவரி. | முன்னைய சேவை நிலையங்களும் சேவைக் காலமும். | இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காரணங்கள். | முன்னுரிமை ஒழுங்கு வரிசையில் விரும்பப்படும் நிலையங்கள். | அமைச்சின் செயலாளருடைய சிபாரிசுகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |